**தூயஆவி பெருவிழா**

**திருவழிபாடு ஆண்டு - C**

**2025-06-08**

*(இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 2;1-11,*

*திருப்பாடல்கள் 104;1,24,29-31,34,*

*திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்: 8:8-17,*

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: 14:15-16,23-26)*

*திருப்பலி முன்னுரை*

*இறை ஆவிக்குரியவர்களே, தூய ஆவியாரின் வருகை பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து விண்ணகம் செல்லும் முன்பு, தனது சீடர்களை பலப்படுத்தும் துணையாளராக தூய ஆவியாரை அனுப்புவதாக வாக்களித்திருந்தார். இயேசு விண்ணேற்றம் அடைந்த பத்தாம் நாளில் தூய ஆவியாரின் வருகை நிகழ்ந்தது. தேற்றரவாளரான தூய ஆவியாரின் ஆற்றலால் உறுதிப்படுத்தப்பட்ட திருத்தூதர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியைத் துணிவுடன் பறைசாற்றி திருச்சபையை நிறுவிய நாளை நாம் இன்று கொண்டாடுகிறோம். திருத்தூதர்களைப் போன்று தூய ஆவியாரின் ஆற்றலைப் பெற்றவர்களாய் கிறிஸ்துவுக்கு சான்று பகரும் வரத்துக்காக, இத்திருப்பலியில் நாம் உருக்கமாக மன்றாடுவோம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*தந்தையாம் இறைவா!*

*திருஅவையின் திருப்பணியாளர்களில் உமது ஆவியைத் தூண்டிவிடும். இதனால் இவர்கள் வேற்றுமை களைந்து, ஒப்பற்றத் திருமகனை நம்பிக்கையாளர் மனங்களில் வார்த்தெடுக்க அருள் புரிய இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*தந்தையே இறைவா!*

*உயிரளிக்கும் உன்னத ஆவியால் நாங்கள் திடம் பெற்றிட அருளும். இதனால் நாங்கள் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு யாவரும் சகோதரத்துவத்தின் சாகாநிலை அடைய இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*தந்தையாம் இறைவா!*

*தூய ஆவியின் துணையால் நாங்கள் ஊனியல்புக்குரியவைகளைக் களைந்து, ஒரே இறைவனாகிய உமது பிள்ளைகளாக மாறி, திருமகனாம் இயேசுவின் உரிமைபெற்ற சகோதரமாக மாற அருள்புரிய இறைவா உம்மை வேண்டுகிறோம்.*

*புதுவாழ்வு அளிப்பவராம் இறைவா,*

*இந்த உலகில் பணம், பதவி, சிற்றின்பம் போன்றவற்றில் சுகங்களைத் தேடி, அருள் வாழ்வில் நாட்டமின்றி வாழும் மக்கள் மீது உமது புதுப்பிக்கும் ஆவியைப் பொழிந்து, விண்ணகத்தை வாழ்வை நாடித் தேடும் மனதை அவர்களுக்கு அருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*பிரிந்ததை இணைப்பவராம் இறைவா,*

*கிறிஸ்துவின் பெயரால் பல்வேறு சபைகளாக வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும், தூய ஆவியாரின் வல்லமையால் ஒன்றிணைக்கப்பட்டு, உலகமெங்கும் கிறிஸ்துவின் சாட்சிகளாக விளங்கத் துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

வாழ்வின் துணையாம் இறைவா,

நோய், துன்பம், அழுகை போன்றவற்றையே வாழ்க்கையாக கொண்டிருக்கும் மக்கள், மன அமைதியையும், மகிழ்ச்சியையும் சுவைக்கும் வகையில் புதிய வாழ்வைக் காண துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

மேன்மைமிகு அரசராம் இறைவா,

பிற சமயத்தினரின் அவமதிப்புகளை பொருட்படுத்தாமல், உலகெங்கும் வாழும் மக்களுக்கு உம் திருமகனது உயிர்ப்பின் நற்செய்தியைக் கொண்டு சேர்க்கும் கருவிகளாக கிறிஸ்தவர்கள் அனைவரையும் உருமாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.